**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 01 பெப்ரவரி 2018

Nestlé
Good Food, Good Life

## *'Nestlé Needs Youth'* முன்னெடுப்பின் ஒரு அங்கமாக நெஸ்லே நிறுவனம் களனி பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை

*ஊழியர்களால் நடாத்தப்படுகின்ற டிப்ளோமா கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின் மூலமாக நாட்டில் இளைஞர்,யுவதிகள் மத்தியில் தொழில்வாய்ப்பிற்கு ஆதரவளிப்பதில் தீவிர அர்ப்பணிப்பு*

நெஸ்லே நிறுவனம், களனி பல்கலைக்கழகத்தின் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பீடத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. உயர் மட்டத்தில் சித்தி பெறும் மாணவர்களுக்கு அவர்களுடைய பட்டப்படிப்பிற்கு மேலதிகமாக சந்தைப்படுத்தலில் கூடுதல் தொழில்சார் தகைமையை வழங்குகின்ற "Certified Professional Marketing Graduate (CPMG)" என்ற பல்கலைக்கழகத்தின் கற்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஒரு மூலோபாயப் பங்காளராக செயற்படுவதற்கு நெஸ்லே நிறுவனம் முன்வந்துள்ளது. இலங்கையில் இளைஞர்,யுவதிகள் மத்தியில் தொழில்வாய்ப்புக்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக நெஸ்லே நிறுவனம் புதிதாக முன்னெடுத்துள்ள "Nestlé Needs Youth" என்ற முன்னெடுப்பின் ஒரு அங்கமாக இந்த உடன்படிக்கை அமைந்துள்ளதுடன், இளைஞர், யுவதிகள் தமது தொழில்வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்காக திறன்கள் மற்றும் பயிற்சியை வழங்கி வருகின்றது.

CPMG கற்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பல்கலைக்கழகத்தில் 'Diploma in People Skills' துறையில் கல்வி பயிலும் முதல் 30 இடங்களிலுள்ள மாணவர்களுக்கு ஒத்துழைப்பு, தலைமைத்துவம், புத்தாக்கம் மற்றும் ஆளுமை அபிவிருத்தி ஆகியவற்றை உள்ளடக்கியவாறு 15 விடயங்களில் அறிவூட்டலும், பயிற்சிகளும் நெஸ்லே ஊழியர்களால் வழங்கப்பட்டுள்ளன. நெஸ்லே நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திலுள்ள நெஸ்லே பயிற்சி மையத்தில் இந்த அமர்வுகள் இடம்பெற்றதுடன், உள்ளக அனுசரணையாளர்கள் பல்வேறுபட்ட பயிற்சி இடைச்செயற்பாடுகளை உபயோகித்து கோட்பாட்டு மற்றும் நடைமுறைப் பயன்பாடுகளை பகிர்ந்துகொண்டனர். சந்தையில் ஆழமான உள் அறிவு மற்றும் உண்மையான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மூன்று பிராந்தியங்கள் மத்தியில் கள விஜயங்களிலும் மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர். 'Diploma in People Skills' துறையில் அண்மையில் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ள முதற்தொகுதி மாணவர்கள் நெஸ்லே நிறுவனம் மற்றும் களனி பல்கலைக்கழகத்திடமிருந்து தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்கின்றனர். முதலிடத்தைப் பெற்ற 10 மாணவர்கள் ஆறு மாத காலப்பகுதிக்கு நிறுவனத்தில் விற்பனைப் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பையும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

நெஸ்லே நிறுவனத்தின் மனித வளப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான இனோகா சிரிமான்ன அவர்கள் கூறுகையில், *"கௌரவம் மிக்க வர்த்தக நிறுவனம் என்ற வகையில், எதிர்காலத் தலைவர்களை வளர்த்து, சிறந்ததொரு மாற்றத்தை ஏற்படுத்தும் கடமை எமக்கு உண்டு. இளைஞர்,யுவதிகள் கல்வியிலிருந்து அலுவலகப் பணிக்கு மாற்றம் காண உதவும் முகமாக 'Nestlé Needs Youth' என்ற முன்னெடுப்பை உலகளாவிய ரீதியில் நாம் ஆரம்பித்துள்ளோம். இந்த சர்வதேச அர்ப்பணிப்புக்கு அமைவாக, உள்நாட்டிலுள்ள இளம் திறமைசாலிகளுக்கு பணியுலகை பரிச்சயப்படுத்தும் வகையில் உள்ளகப் பயிற்சிகள் மற்றும் தொழிற்பயிற்சிகளை நாம் வழங்கி வருகின்றோம். பட்டதாரி மாணவர்களுக்கான தொழிற் சந்தைகள் மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் எமது கூட்டிணைவுகளையும் நாம் வலுப்படுத்தியுள்ளோம். தற்போதைய உலகில் பணி இயக்கவியல் மாறிக்கொண்டே செல்கின்ற நிலையில், 'கற்றல் வல்லமை' என்பது ஒரு முக்கிய திறனாக மாற்றம் கண்டு வருகின்றது. திறமைசாலிகளை உருவாக்குவதில் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள களனி பல்கலைக்கழகத்துடனான எமது சமீபத்தைய கூட்டிணைவு மேற்குறிப்பிட்ட திறன்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளதுடன், இளம் மாணவர்கள் தொழிலாளர் சந்தையில் வெற்றிகரமாக இணைந்து கொள்வதற்கு அவர்களுக்கு உதவும் வகையில் வர்த்தக உலகின் அனுபவத்தை அவர்கள் பெற்றுக்கொள்ள இடமளிக்கின்றது,"* என்று குறிப்பிட்டார்.

நெஸ்லே நிறுவனம் இளைஞர்,யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பை வழங்கும் முயற்சிகளையும் முன்னெடுத்து வருவதுடன், தற்போது நெஸ்லே நிறுவனத்தின் பணியாளர்களில் 35% ஆனோர் 30

வயதிற்கு உட்பட்டவர்களாகவும், மொத்த பணியாளர்களில் 60% ஆனோர் மில்லேனியம் தலைமுறையைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். டிஜிட்டல் மீடியா, தொழிற் சந்தைகள் மற்றும் செயலமர்வுகள் போன்ற நிகழ்வுகள், சுயவிபரக்கோவையை எழுதி தயார்படுத்தல் மற்றும் நேர்காணலுக்கு ஆயத்தம் செய்தல் போன்றவற்றின் மூலமாக இளைஞர்,யுவதிகளை பணிக்கு தயார்படுத்தும் செயற்பாடுகளையும் நெஸ்லே நிறுவனம் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், *“ஒரு நிறுவனம் என்ற வகையில், தளைத்தோங்கும் சமூகங்களை உருவாக்க உதவுவது எமது நோக்கத்தின் ஒரு பகுதியாகும். பண்பான தொழில்வாய்ப்பு மற்றும் பன்முகத்தன்மை ஆகியவற்றை ஊக்குவிப்பதில் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற நெஸ்லே நிறுவனம், ஒவ்வொருவருக்கும் சமவாய்ப்பு கிடைப்பதையும் உறுதி செய்து வருகின்றது. இளைஞர்களும், யுவதிகளுமே எமது சமுதாயங்களினதும், எமது பொருளாதாரங்களினதும் எதிர்காலம். எனினும் பாரம்பரியமான கல்வி மட்டும் வருங்காலத்தில் போதியதாக அமையும் வாய்ப்புக்கள் பெரும்பாலும் குறைவு. மிக வேகமாக மாற்றம் கண்டு வருகின்ற, டிஜிட்டல்மயப்படுத்தப்பட்டுள்ள பணிச்சூழலில் தமக்கு உதவுவதற்கு பொருத்தமான திறன்கள் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் தேவைப்படுகின்றது. அபிவிருத்தியின் அடுத்த கட்டத்தை முன்னெடுக்கும் இளைஞர்,யுவதிகளின் திறன்களை உள்ளிணைக்காத பட்சத்தில் ஒரு நிறுவனம் என்ற வகையில் நாம் வளர்ச்சி கண்டு, சமூகங்களுக்கும் உதவும் இலக்கு கடினமான ஒன்றாகவே அமையும். ஆகவே மேற்குறிப்பிட்ட நீண்டகால அணுகுமுறையானது நெஸ்லே நிறுவனத்தின் உள்ளங்கமாகவே எப்போதும் அமையப்பெற்றுள்ளது,”* என்று குறிப்பிட்டார்.